**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**முன்னிலை :– திருமதி. P. கனிமொழி, L. L. M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 04 ஆம் நாள்.

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் புதன் கிழமை

**TNMY09–001777–2025**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 162/2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>செம்பனார்கோவில் காவல் நிலையம்,<br>குற்ற எண் 648/2021 |

–– எதிர் ––

| | | |
|---|---|---|
| எதிரி | : | பரத்குமார், 37/2026<br>த/பெ துரைராஜ்<br>மேலத்தெரு, மேலப்பாதி<br>தரங்கம்பாடி தாலுக்கா. |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | குற்றம் சாட்டப்பட்டது | | எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338, 304– A ன் கீழ் | |
| 2. | குற்றம் குறித்து வினவப்பட்டது | | எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338, 304– A ன் கீழ் | |
| 3. | சம்பவம் நடந்த நாள் | | 11.07.2021 | |
| 4. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | | 12.07.2021 | |
| 5. | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | 16.08.2021 | 16.08.2021 |
| 6. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | | 24.09.2021 | |



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.18 16:37:48 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | பிரிவு 274 BNSS ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | | 10.12.2025 | | |
| 8. | பிரிவு 355 BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | | அரசு தரப்பில் U/s 348 of BNSS ன் கீழ் 10.03.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.01/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. | | |
| 9. | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 20.02.2026 | 20.02.2026 |
| | | | அ.சா.2 | 20.02.2026 | 20.02.2026 |
| | | | அ.சா.3 | 25.02.2026 | 25.02.2026 |
| | | | அ.சா.4 | 10.03.2026 | 10.03.2026 |
| | | | அ.சா.5 | 13.03.2026 | 13.03.2026 |
| 10. | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து பிரிவு 351(1) (b) BNSSன் கீழ் வினவிய நாள் | | 17.03.2026 | | |

இவ்வழக்கு 30.10.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 17.03.2026–ஆம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. B. செந்தில்வடிவு, தரங்கம்பாடி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருமதி. K. ராஜலெட்சுமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்...



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.18 16:37:57 +0530

**தீர்ப்புரை**

1. கடந்த 11.07.2021ம் தேதி இரவு 07.45 மணியவில் வாதியின் அண்ணன் மகன் சுரேஷ் என்பவர் TN 51 T 9878 Hero Splendor இருசக்கர வாகனத்தில் சாட்சி 2 வீரதினகர் என்பவரை பின் இருக்கையில் அமர்த்திக்கொண்டு முடிச்சிருச்சம்பள்ளி ரஃபிக் என்பவரது வீட்டிற்கு எதிரில் வடக்கிலிருந்து தெற்குநோக்கி சென்றபோது எதிரே தெற்கிலிருந்து வடக்குநோக்கி TN 82 2120 என்ற எண் கொண்ட TVS Scooty இருசக்கர வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சுரேஷ் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும், சாட்சி 2க்கு தலையில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், சுரேஷ் என்பவருக்கு தலையில் காயத்தை உண்டு பண்ணி அவர் இறந்துபோவதற்கு காரணமாக இருந்து குற்றம்புரிந்துள்ளதால் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338, 304–A ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338, 304– A ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும். பிரிவு 230 BNSSன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரில் எதிரி மீது கேள்விகள் வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338, 304– A படியான குற்றங்கள் குறித்து வினவ எதிரி குற்றத்தினை மறுத்துரைத்தார். எதிரி குற்றச்சாட்டினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.18 16:38:04 +0530

5. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரை வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**:–

**அ.சா.1 ராமலிங்கம்** தனது சாட்சியத்தில், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் தான் கும்பகோணத்திருந்தபோது அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் தனக்கு செம்பனார்கோவில் போலீசார் போன் செய்து தனது அண்ணன் மகன் சுரேஷ் தெற்கு தெரு மெயின்ரோட்டில் வாகன விபத்தில் அடிப்பட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், பின்னர் தான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சென்றபோது அங்கிருந்து அவரை திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள் என்றும், அங்கு சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக தான் செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், நீதிமன்றத்தில் தற்போது தன்னிடம் காட்டப்படும் **புகார் மனுவில் உள்ள அ.சா.ஆ.1 ஆன கையொப்பம்** தன்னுடையதுதான் என்றும் பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. **அ.சா.2 வீரதினகர்** தனது சாட்சியத்தில், சுமார் 2,3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 07.00 மணியளவில் சுரேஷ் என்பவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சுரேஷ் ஓட்ட பின்னால் தான் அமர்ந்துகொண்டு புரோட்டா வாங்கிக்கொண்டு திரும்பி வரும்போது பூம்புகார் மெயின்ரோட்டில் தாங்கள் சென்ற வாகனத்தின் மீது வேறொரு வாகனம் வந்து மோதியதாகவும், இரவு நேரம் என்பதால் எந்த வாகனம் மோதியது என்று தான் கவனிக்கவில்லை என்றும், அந்த விபத்தில் தனக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், தன்னுடன் வந்த சுரேஷ் என்பவர் இந்த விபத்தினால் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், தான் மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தததாகவும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.18 16:38:11 +0530

8. **அ.சா.3 பாலமுருகன்** தனது சாட்சியத்தில், கடந்த 11.07.2021 அன்று தான் பூம்புகார் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் கடற்கரையில் பாதுகாப்பு பணியில் இருந்ததாகவும், இரவு 09.00 மணிக்கு தனது பணியை முடித்துவிட்டு 10.00 மணியளவில் தனது வீட்டிற்கு வந்தபோது தனது மனைவி தங்கள் தெருவை சேர்ந்த சுரேஷ் மற்றும் தினகருக்கு விபத்து ஏற்பட்டதாக கூறியதாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

9. **அ.சா.4 இளங்கோவன்** தனது சாட்சியத்தில், தான் தற்போது செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னோடு பணிபுரிந்த வகையில் சிறப்பு உதவி ஆய்வாளர் மணிமாறன், காவல் ஆய்வாளர்கள் சுகந்தி மற்றும் செல்வி ஆகியோர்களின் கையெழுத்து நன்கு பரிட்சையம், இந்த வழக்கின் சாட்சிகள் போலிசார் விசாரணைக்கு மாறுப்பட்ட சாட்சியங்கள் அளித்திருப்பதால் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 12.07.2021ம் தேதி 13.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் மணிமாறன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது ராமலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.சா.ஆ.2 ஆன புகாரை** பெற்றார் என்றும், பின்னர் காவல் நிலைய குற்ற எண் 648/2021, இதச பிரிவுகள் 279, 337, 304(A) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் **அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையை** பதிவு செய்தார் என்றும், பின்னர் இந்த வழக்கினை காவல் ஆய்வாளர் சுகந்தி அவர்கள் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் கல்யாணசுந்தரம் மற்றும் சுசீந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு **அ.சா.ஆ.4 ஆன பார்வைமகசர் மற்றும் அ,.சா.ஆ.5 ஆன வரைபடத்தினை** தயார் செய்தார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலத்தினை தனித்தனியே பதிவு செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.18 16:38:18 +0530

10. பின்னர் விபத்தில் இறந்த சுரேஷ் என்பவரின் சடலத்தின் மீதான விசாரணையை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து **அ.சா.ஆ.6 ஆன பிரேத விசாரணை அறிக்கை** தயார் செய்தார் என்றும், பின்னர் திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பிரேத விசாரணை செய்த மருத்துவர் நவீன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று **அ.சா.ஆ.7 ஆன பிரேத பரிசோதனை சான்று** பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கில் காயம்பட்ட வீரதினகருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணவேலு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிந்து அவர் கொடுத்த **அ.சா.ஆ.8 ஆன காயச்சான்றிதழை** பெற்றார் என்றும், அசா2 ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான இதச பரிவுகள் 279, 337, 304(A) ல் இருந்து இதச பிரிவுகள் 279, 338, 304(A) ஆக மாற்றம் செய்து **அ.சா.ஆ.9 ஆன சட்டப்பிரிவு மாற்று அறிக்கையை** தயார் செய்தார் என்றும், இந்த விபத்தில் ஈடுபட்ட இரு சக்கர வாகனம் TN 82 2120 என்ற பதிவெண் கொண்ட Scotty pep plus மற்றும் TN 51 T 9878 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு உட்படுத்தி ஆய்வாளர் ராம்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் கொடுத்த **அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை** பெற்றார் என்றும், பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து காவல் ஆய்வாளர் செல்வி அவர்கள் இதச சட்டபிரிவுகள் 279, 338, 304(A) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என சாட்சியம் அளித்துள்ளார்.

11. **அ.சா.5 கல்யாணசுந்தரம்** தனது சாட்சியத்தில், நீதிமன்றத்தில் தற்போது தன்னிடம் காட்டப்படும் **பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் உள்ள அ.சா.ஆ.12 ஆன கையொப்பம்** தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையொப்பத்தை எங்கு, எப்போது, எதற்காக செய்தேன் என்று நினைவில் இல்லை என்று பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.18 16:38:26 +0530

12. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுவிட்டதால் அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள் 3, 6 முதல் 17 வரையிலான பட்டியல் சாட்சிகளை விரைவான வழக்கு விசாரணைக்காக வேண்டி விசாரிக்க தேவையில்லை என்று கருதி மேற்குறிப்பு செய்ததன் பேரில் அந்த சாட்சிகளை விசாரிப்பதில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

13. எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSSன் கீழ் எதிரிக்குப் பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

14. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 338, 304–A ன்படி சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

15. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

## <u>தீர்வு</u>

16. அரசு தரப்பில், கடந்த 11.07.2021ம் தேதி இரவு 07.45 மணியளவில் இவ்வழக்கில் இறந்துபோன சுரேஷ் என்பவர் அ.சா.2ஐ பின்னால் அமர்த்திக்கொண்டு இருசக்கர வாகனத்தில் முடிச்சிருச்சம்பள்ளி ரஃபிக் என்பவரது வீட்டிற்கு எதிரில் வடக்கிலிருந்து தெற்குநோக்கி சென்றபோது எதிரே தெற்கிலிருந்து வடக்குநோக்கி TVS Scooty இருசக்கர வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சுரேஷ் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அ.சா.2க்கு தலையில் கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், சுரேஷ் என்பவருக்கு தலையில் காயத்தை



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.18 16:38:34 +0530

ஏற்படுத்தி அவர் இறந்துபோவதற்கு காரணமாக இருந்ததாக எதிரி மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

17. எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரை வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ12** வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

18. கடந்த 11.07.2021ம் தேதி இரவு 07.45 மணிக்கு முடிச்சிருச்சம்பள்ளி ரஃபிக் என்பவரது வீட்டிற்கு எதிரில் விபத்து ஏற்பட்டது என்பதும், அந்த விபத்தில் அ.சா.2க்கு கொடுங்காயமும், சுரேஷ் என்பவருக்கு தலையில் காயமும் ஏற்பட்டு இறந்துள்ளார் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், எதிரி தரப்பில் எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை குறித்து மட்டும் தான் ஆட்சேபனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

19. மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை நிரூபிக்கும் விதத்தில் அரசு தரப்பில் புகார் மனு அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் அ.சா.ஆ10 மற்றும் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

20. எனவே இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் யாதெனில், எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த விபத்தினை ஏற்படுத்தினாரா? என்பதே ஆகும். அதுக்குறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் தான் கும்பகோணத்தில் இருந்தபோது அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் தனக்கு செம்பனார்கோவில் போலீசார் போன் செய்து தனது அண்ணன் மகன் சுரேஷ் தெற்கு தெரு மெயின்ரோட்டில் வாகன விபத்தில் அடிப்பட்டதாக தகவல் சொன்னதாக



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.18 16:38:42 +0530

சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.1 இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதும், வழக்கு சம்பந்தமாக கேள்விபட்டே சம்பவ இடத்திற்கு சென்றுள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

21. இந்த வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், சுமார் 2,3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 07.00 மணியளவில் சுரேஷ் என்பவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சுரேஷ் ஓட்ட பின்னால் தான் அமர்ந்துகொண்டு புரோட்டா வாங்கிக்கொண்டு திரும்பி வரும்போது பூம்புகார் மெயின்ரோட்டில் தாங்கள் சென்ற வாகனத்தின் மீது வேறொரு வாகனம் வந்து மோதியதாகவும், இரவு நேரம் என்பதால் எந்த வாகனம் மோதியது என்று தான் கவனிக்கவில்லை என்றும், அந்த விபத்தில் தனக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும், தன்னுடன் வந்த சுரேஷ் என்பவர் இந்த விபத்தினால் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

22. இவ்வழக்கினை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 11.07.2021 அன்று தான் பூம்புகார் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் கடற்கரையில் பாதுகாப்பு பணியில் இருந்தபோது இரவு 09.00 மணிக்கு தனது பணியை முடித்துவிட்டு 10.00 மணியளவில் தனது வீட்டிற்கு வந்தபோது தனது மனைவி தங்கள் தெருவை சேர்ந்த சுரேஷ் மற்றும் தினகருக்கு விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

23. பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.5 தனது சாட்சியத்தில், **பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை** எங்கு, எப்போது, எதற்காக செய்தேன் என்று நினைவில் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.18 16:38:50 +0530

24. அ.சா.1 முதல் அ.சா.3 மற்றும் அ.சா.5ன் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், எதிரிதான் இந்த வழக்கு விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டினார் என்று எதிரியை அடையாளம் காட்டவில்லை. மேலும், எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த விபத்தினை ஏற்படுத்தினார் என்று எந்தவொரு சாட்சியமும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றத்தை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25. முடிவாக, எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338, 304–A கீழ் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 278(1) BNSS–ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

26. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

27. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.18 16:38:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

C.C.162/2025

**<u>அட்டவணை</u> :-**

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

அ.சா.1 – ராமலிங்கம்

அ.சா.2 – வீரதினகர்

அ.சா.3 – பாலமுருகன்

அ.சா.4 – இளங்கோவன், சிறப்பு உதவி ஆய்வாளர்

அ.சா.5 – கல்யாணசுந்தரம்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

அ.சா.ஆ. 1 – புகார் மனுவில் உள்ள கையொப்பம்

அ.சா.ஆ. 2 – புகார் மனு

அ.சா.ஆ. 3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ. 4 – பார்வை மகசர்

அ.சா.ஆ. 5 – மாதிரி வரைபடம்

அ.சா.ஆ. 6 – பிரேத விசாரணை அறிக்கை

அ.சா.ஆ. 7 – பிரேத பரிசோதனை அறிக்கை

அ.சா.ஆ. 8 – காயச்சான்றிதழ்

அ.சா.ஆ. 9 – சட்டப்பிரிவு மாற்று அறிக்கை

அ.சா.ஆ. 10– மோட்டார் வாகன ஆய்வறிக்கை

அ.சா.ஆ. 11– மோட்டார் வாகன ஆய்வறிக்கை

அ.சா.ஆ. 12 – பார்வை மகசரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம்

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u> :-** இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள்</u> :- இல்லை

KANIMOZHI

Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.18 16:39:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

குறிப்பு:

1. வழக்கு விசாரணையின்போது எதிரி ஜாமீனில் இருந்தார்.

2. எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது